சுத்தம் செய்தல் போன்ற வேலை வாய்ப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு. எனவே, மலைப் பகுதியிலே கூட்டுறவுச் சங்கம் அமைக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே மலைப் பகுதிகள் நிறைந்து இருக்கிற சேலம், தர்மபுரி, திருச்சிராப்பள்ளி, பெரியார், நீலகிரி, வட ஆற்காடு—அம்பேத்கார், தென் ஆற்காடு, மற்றும் திருவண்ணாமலை—சம்புவராயர், ஆகிய மாவட்டங்களிலே மொத்தம் 18 பெரும் பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள்,—''லாம்ப் சொசைட்டிஸ்'' செயல்பட்டு வருகின்றன. இவைகளின் மூலமாகத்தான் அங்கே இருக்கின்ற ஆதிவாசிகளையும், மலைவாழ் மக்களையும் பயன்படுத்தி, அந்தப் பொருட்களை சேகரித்து, விற்பனை செய்து வருகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

செல்வி எல். சுலோசனா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டுப்பாளையம் தொகுதியில் பல கிராமங்களில் மலைவாழ் மக்கள் வாழ்கின்றனர். அந்த மக்கள் பயன்பெற வனப் பொருட்களை விற்பனை செய்ய கூட்டுறவுச் சங்கம் ஒன்றை அந்த மலைப் பகுதியிலே அமைக்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாபுண்மிகு பேரவைத் தலைவர் : வினா எண். 356, டாக்டர் அ. ஸ்ரீதரன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

356—

வால்பாறை தேயிலைத் தோட்டத் தொழிலாளர் மருத்துவ மனையில் பெண் மருத்துவர்கள்

*11582—டாக்டர் அ. ஸ்ரீதரன் :

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு என்று உள்ள மருத்துவமனையில் போதிய பெண் மருத்துவர்கள் உள்ளனரா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

1993 ஏப்ரல் 15]

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) விவர அறிக்கை ஒன்று தனியாக அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

விவர அறிக்கை.

தமிழ்நாடு தோட்டத் தொழிலாளர் விதிகளில் விதி 21 (1)-ன்கீழ் ஒரு தோட்ட நிறுவனம் 1,000 மற்றும் அதற்கு மேல் தொழிலாளர்களைப் பணிக்கு அமர்த்தியிருந்தால் அது சொந்தத் தோட்ட மருத்துவமனையை நிறுவ வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் விதி 21 (3)-ன் கீழ் 1,750 தொழிலாளர்களுக்கும் அல்லது பகுதிக்கோ ஒரு தேர்ச்சிபெற்ற மருத்துவரைப் பணி நியமனம் செய்ய குறிப்பிடப்பட்டுள்ளது. மற்றும் ஒரு தோட்ட நிறுவனத்தில் 750-க்குக் குறைவில்லாமல் பெண் தொழிலாளர் பணிபுரிவார் களேயானால் ஒரு பெண் மருத்துவரை நியமனம் செய்ய சட்டம் வகை செய்துள்ளது. எனவே 750-க்குக் குறைவாக பெண் தொழிலாளர்கள் ஒரு தோட்ட நிறுவனத்தில் இருப்பின் ஒரு பெண் மருத்துவர் நியமனம் செய்தல் சட்ட பூர்வமாக வரையறுக்கப்படவில்லை.

வால்பாறையிலுள்ள எந்த தனிப்பட்ட தோட்ட நிறுவனத் திலும் 750 பெண்கள் பணியில் அமர்த்தப்படவில்லை. எனவே சட்டப்படி பெண் மருத்துவரை நியமனம் செய்வது எழவில்லை. இருப்பினும் கீழ்க்கண்ட 6 தோட்ட நிறுவனங்கள் தங்கள் தோட்ட மருத்துவமனையில் பெண் மருத்துவர்களை பெண் தொழிலாளர்களின் நலனுக்காக பணியில் அமர்த்தியுள்ளனர்.

1. கருமலை எஸ்டேட்.
2. மூடீஸ் எஸ்டேட்.
3. ஸ்டான்மோர் எஸ்டேட்.
4. உருளிக்கல் எஸ்டேட்.
5. சோலையார் எஸ்டேட்.
6. ஐபர்பாடி எஸ்டேட்.

டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறை சட்டமன்றத் தொகுதியில் சுமார் 40 ஆயிரம் நிரந்தர தேயிலைத் தோட்டத் தொழி

லாளர்கள் இருக்கிறார்கள். அவர்களில் சுமார் 18 ஆயிரம் பெண் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். நான் மக்கள் குறைகளைக் கேட்கிறபோது கருமலை எஸ்டேட் மற்றும் சோலையார் எஸ்டேட்டினுடைய மருத்துவமனைகளிலே பெண் மருத்துவர்கள் இல்லாததால், என்னை அந்தப் பெண் தொழிலாளர்கள் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள். அவர்கள் என்னிடத்திலே சொன்னது, 'நீங்களே டாக்டராக இருக்கிறீர்கள், பெண்களுக்கு என்று வருகிற தனிப்பட்ட நோய்களை நாங்கள் எப்படி ஆண் மருத்துவர்களிடம் சொல்வது, எனவே, தொழிலாளர்கள் சட்டப்படி, எங்களுக்கு பெண் மருத்துவர்களை நியமிக்க வேண்டும்' என்று என்னிடத்திலே கேட்டுக் கொண்டார்கள். எனவே தொழிலாளர்கள் நிறைந்த பகுதி அப்பகுதி என்பதால் மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் இதில் தலையிட்டு பெண் மருத்துவர்களை நியமனம் செய்வதற்கு ஆவன செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10.55

<u>மாண்புமிகு திரு. சே. ரகுபதி</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தோட்ட நிறுவனங்களில் 750-க்குக் குறைவில்லாமல் பெண் தொழிலாளர்கள் பணி புரிவார்களேயானால் ஒரு பெண் மருத்துவரை நியமனம் செய்ய சட்டம் வகை செய்துள்ளது. ஆனால் வால்பாறையில் எந்தத் தோட்டத்திலும் 750-க்குக் குறைவாகத்தான் பெண் தொழிலாளர்கள் பணி புரிகிறார்களே தவிர 750-க்கு மேல் பணி புரியவில்லை. என்றாலும் விவர அறிக்கையில் குறிப்பிட்டுள்ளபடி 6 எஸ்டேட்டுகளிலே அங்கே பெண் மருத்துவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>டாக்டர் அ. ஸ்ரீதரன்</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண் மருத்துவர்கள் இல்லாத காரணத்தால் அங்கே குடும்பக் கட்டுப்பாடு போன்ற மருத்துவ சிகிச்சைகளை செய்வதற்கான சாத்தியக்கூறுகள் இல்லாத நிலை இருக்கிற காரணத்தால் அங்கே இருக்கிற கார்டன் ஹாஸ்பிடல் மற்றும் குரூப் ஹாஸ்பிடல்களில் இதுவரையிலும் பெண் மருத்துவர்கள் ஒவ்வொரு மருத்துவமனையிலும் செயல்பட்டு பணியாற்றி வந்திருக்கிறார்கள். எனவே பெண் மருத்துவர்கள் இல்லாத அந்த இடங்களைக் கண்டறிந்து உடனடியாக பெண் மருத்துவர்களை நியமிப்பதற்கு அந்தத் தனியார் நிறுவனங்களுக்கு அரசு உரிய உத்திரவை வழங்குமா என அறிய விரும்புகிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1993 ஏப்ரல் 15]

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப்படி அது பற்றி பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 357. டாக்டர் பெ. வீரபாண்டியன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

357—

ஏரிக்கால்வாய்கள் வழியாக நிலத்தடி குழாய்கள் அமைத்தல்.

*14715—டாக்டர் பெ. வீரபாண்டியன் :

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாய நீர்ப் பாசன வசதிக்காக ஏரிக்கால்வாய்க வழியாக நிலத்தடி குழாய்கள் அமைக்க அரசிடம் கருத்துரு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர் :

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) விவசாய நீர்ப்பாசனத்திற்காக ஏரிக்கால்வாய்கள் மூலம் நிலத்தடி குழாய்கள் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

டாக்டர் பெ. வீரபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகள் நன்மை அடைய வேண்டும், விளைச்சலைப் பெருக்க வேண்டும் என்ற காரணத்திற்காகத்தாள் இந்தக் கள்வியை நான் தொடுத்தேன். நீர்ப் பாசன வசதிக்காக ஏரிக்கால்வாய் வழியாக நிலத்தடி குழாய் அமைத்தால் தொலைவில் ஏரி இருப்பின் அல்லது மிக அதிக தூரத்தில் நிலங்கள் இருப்பின் இந்தக் குழாய் மூலமாகத் தண்ணீர் பெற்று விவசாயிகள் நன்மை அடைய வாய்ப்பு உண்டு. ஆகவே இதை அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏரிக்கால்வாய்களில் பிரதான கால்வாய்கள் பொதுப் பணித் துறையின் மூலமாக அமைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன. வேளாண்மைப்